முருகப்பெருமான் துணை

# மகான் ஏனாதிநாதர் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

26.11.2021, வெள்ளிக்கிழமை

1. ஆன்ம தேக அல்லல் போக்கி
ஆசாபாச மாயை நீக்கி
(காம தேகம் நீங்கினால் பந்தபாசம் அற்றுபோகும் முருகப்பெருமான் ஆசி பெறாமல் இந்த வாய்ப்பினை பெறமுடியாது. ஓங்காரக் குடிலாசானுக்கு முருகப்பெருமான் இந்த வாய்ப்பினை அருயியுள்ளார். உலக மக்கள் அனைவரும் முருகப்பெருமான் திருவடியில் சரணடைந்தால் இந்த வாய்ப்பினை பெறலாம்)
நன்மைபுரிய வந்த அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே பிலவ தேள் திங்கள்
குறைவிலா தசதிகதி புகர் வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 10ம் நாள், 26.11.2021 வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
தேசிகனுக்கு ஏனாதிநாதர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழி காட்டும் அரங்கன்
தானதரும மார்க்கம் தனை
தவமாக உலகோர் ஏற்க
4. ஏற்கவே உலகம் தரும பலம்
இணையில்லா மிகுதி கண்டு
ஏற்புள்ள எல்லா வளர்ச்சிகளும்
இனிதே இவ்வுலகம் காண்கும்
5. காண்கவே இந்த அற்புதத்தை
கந்தவேலன் தானும் அரங்கன்
ஆன்மீக ஞானமாக அருளி
(ஆன்மா காம தேகத்தினுள் சிக்கியுள்ளது காம தேகம் நீங்கினால் ஆன்மா ஒளி பெறும் முருகப்பெருமான் ஆசியில்லாமல் இந்த வாய்ப்பினை பெறமுடியாது)
அகிலமே பயனுற வகை செய்ய
6. செய்யவே இந்த மார்க்கம்
சிறப்புற எங்கும் பரவிட
அய்யமிலா உலகோர் ஏற்று
ஆறுமுகா என வணங்கி வர
7. வருகவே யாவர்க்கும் ஞானம்
வள்ளல்தன்மையாகப் பெருகி
தருமபலம் தவபலமாகப் பரவி
தரணியே அரங்கன் அவதாரம் உணரும்
(முருகப்பெருமானே உலக நன்மைக்காக ஓங்காரக்குடிலாசானாக அவதாரம் எடுத்துள்ளார்கள்)

8. உணரவே உண்மைநிலை கூடி
உலக சேமம் குறித்த வண்ணம்
உணர்வும் தெளிவும் கூடி
உலகோர் அரங்கன் அருளைபெற

9. அருளைபெற ஞானிகள் ஆவர்
(உலக மனிதவர்க்கத்தில் ஒரு சிலர் மட்டும் முருகப்பெருமானின் பெருமையை உணர்ந்து முருகப்பெருமானின் திருவடியை பூசித்து ஆசி பெற்றுக் கொள்வார்கள்)
அழியாமை கூடி சிறந்து
இருளை விரட்டும் சக்திகளாக
யுகத்தை காக்கும் மகான்களாக

10. ஆகவே மாற்றம் கண்டு
அகிலத்தை பாதுகாக்கும்படி
மிகையான சேவை பெருக்கி
மேலவர்கள் ஆசிபெற உலகோர்

11. உலகோர் உலகமாற்றமதை
உண்மை செயலாக்கி முடிப்பர்
உலகினில் ஞான ஆட்சி படைப்பர்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

மனித தேகத்தில் உள்ள அசுத்த தேகத்தை நீக்கி (நீர்த்து) சுத்த தேகத்தை கொண்டு முருகப்பெருமானை பூசித்து வருபவர்களுக்கு மரணமில்லா பெருவாழ்வு கிட்டும். சுத்த தேகமே சொர்ண தேகமாகும். இந்த வாய்ப்பினை பெற விரும்புகிறவர்கள் உயிர் கொலை தவிர்த்து புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு அனுதினமும் முருகப்பெருமானின் திருவடியை பூசித்து வர வேண்டும். மேலும் வாரத்திற்கு குறைந்தபட்சம் இருவருக்காவது (பசித்த ஏழை எளியவருக்கு) அன்னதானம் செய்ய வேண்டும்.